செய்தி வெளியீடு எண்:603 நாள்:12.08.2021

# செய்தி வெளியீடு

# மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தமிழகசுய உதவிக் குழுக்களின் நெகிழி சுழற்சி முயற்சினை காணொலிகாட்சி வாயிலாக கலந்துரையாடி பாராட்டினார்கள்

*********************

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் இன்று (12.8.2021) பிற்பகல் 12.30 மணிக்கு தேர்தெடுக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுடன் காணொலி வாயிலாக மகளிரின் தற்சார்பு குறித்து கலந்துரையாடினார். தமிழ்நாடு முழுவதும் 4,459 இடங்களில் இருந்து 18,14,908 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் இக்காணொலி காட்சியினை பார்த்து பயன் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் நாடு முழுவதும் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளின் தொகுப்பு மற்றும் விவசாய வாழ்வாதாரங்கள் குறித்த கையேடு ஆகியவற்றையும் பிரதமர் வெளியிட்டு தொழில் முனைவர்களான ஐந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

தேசிய அளவில் தேர்ந்தேடுக்கப்பட்ட ஐந்து சுய உதவிக் குழுக்களிலிருந்து தமிழ்நாட்டிலிருந்து, திண்டுக்கல் மாவட்டம், என்.பஞ்சம்பட்டி கிராம ஊராட்சியில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுவினரால் நடத்தப்படும் நெகிழி மறுசுழற்சி மைய மேலாளர் / மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் திருமதி.ஜெயந்தியுடன் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் காணொலியில் கலந்துரையாடினார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், என்.பஞ்சம்பட்டி ஊராட்சியில் 2006ஆம் ஆண்டு இந்துசுவா சுய உதவிக் குழுவில் உறுப்பினராய் இருந்து பின்னர் அப்பகுதியில் நெகிழிகளால் ஏற்படும் சுற்றுப்புற சூழல் மாசுவை குறைக்கும் வழிமுறைகளை அங்குள்ள அதிகாரிகளிடம் கலந்து

ஆலோசித்து கண்டறிந்த வழிமுறைகளையும், அந்த சுய உதவிக் குழு உறுப்பினர்களால் செயல்படுத்தப்பட்டுவரும் நெகிழி மறுசுழற்சி மைய முக்கிய செயல்பாடுகளையும் திருமதி. ஜெயந்தி அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட நெகிழி மாசு சுழற்சி வாழ்வாதார செயல்பாடு நாளடைவில் பெரிதாக வளர்ச்சி அடைந்து 2010ஆம் ஆண்டில் ஒரு பெரிய மையமாக உருவெடுத்து, அப்போதைய தமிழக துணை முதலமைச்சர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் அமைச்சராகியிருந்த தற்போதைய மான்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சுழல் நிதியாக ரூ. 50,000 க்கான காசோலையை நலத்திட்ட விழாவில் பெற்றார்.

இந்த மையத்தில் பழைய நெகிழிகளை தூளாக்கி கிராமப் புறங்களில் அமைக்கப்படும் தார் சாலைகளில் தாருடன் கலந்து பயன்படுத்தப்படுவதாக தெரிவித்தார். இதற்கான பழைய நெகிழிகளை ரூ.5.00க்கு கொள்முதல் செய்து அதனை தூளாக்கி கிலோ ரூ.30/–க்கு விற்பனை செய்வதாகத் தெரிவித்தார். இதுவரை 102 டன் நெகிழி தூளாக்கப்பட்டு ரூபாய் 30 இலட்சத்து 30 ஆயிரம் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும், சுமார் 200 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்க நெகிழி துகள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் இத்தொழிலில் ஈடுப்பட்டுவரும் உறுப்பினர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.400 வருமானம் ஈட்டும் அளவுக்கு லாபகரமான தொழிலாக வளர்ந்துள்ளதாக காணொலி வாயிலாக திருமதி. ஜெயந்தி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் தெரிவித்தார்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், நம் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகளைப் பாராட்டி மேலும் சிறப்பாக செயல்பட வாழ்த்தினர். தொடர்ந்து பிற துறைகளுடன் இணைந்து சுய உதவிக் குழுக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதுடன், தூய்மை பாரத இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சிறப்பாக செயல்பட வேண்டும் எனவும், படிப்பறிவற்றவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்க சுய உதவிக் குழுக்கள் முன்வர வேண்டும் என்றும், இதன்

விளைவாக நாடு முன்னேற்றப் பாதையில் செல்லும் எனவும் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள்தெரிவித்தார்கள்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் அளவில் முயற்சிகள் எடுத்து வருவதாகவும் இந்த தொழில் முயற்சியை வரவேற்பதாகவும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். தமிழ்நாடு அரசானது அனைத்து கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மையை திறம்பட செயல்படுத்த அனைத்து வகையான நிதி ஆதாரம் மற்றும் பயிற்சியினை வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது. மேலும் இதுபோன்ற வருமானம் ஈட்டக் கூடிய சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு இணக்கமான மகளிர் சிறுகுறு தொழில் நிறுவனங்கள் வளர்ச்சி அடைய மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் அனைத்து உதவிகளும் செய்துதர அரசு முனைப்புக் காட்டி வருகிறது.

தமிழ்நாடு அரசு சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தவும், சுய உதவிக் குழு உறுப்பினர்களை சிறந்த தொழில் முனைவோராக்கவும், பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு துணைபுரிந்து வருகிறது. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் மகளிர் முன்னெடுத்துச் செல்லும் உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டமைப்புகள், சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள், ஆட்டு வங்கி, இயற்கை வேளாண் தொகுப்புகள் உருவாக்கி இவ்வரசானது ஒரு கோடி மகளிரை உறுப்பினர்களாக கொண்ட 7.22 இலட்சம் சுய உதவிக் குழு வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுப்படுத்துவதற்கு உறுதுணையாக உள்ளது.

மேலும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப் படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறை பிற துறைகளுடன் இனணந்து மகளிரின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் முயற்சியில் ஈடுப்பட்டுள்ளது. திடக் கழிவு மேலாண்மை நெகிழி மறுசுழற்சி, மண்புழு உரக் கிடங்கு ஆகியவற்றின் மூலம் மகளிரின் வாழ்வாதாரத்தை மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் பசுமையான மாசற்ற திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத தூய்மை கிராமங்கள் மற்றும் தூய்மை பாரதம் உருவாக்க வழிவகை செய்துள்ளது. சுழல்நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாகிய, அரசு மானியங்களாலும், வங்கி கடன்களாளும்

வழங்கப்பட்டு மகளிரால் நடத்தப்படும் தொழில்கள் உருவாக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் நடத்தப்பட்ட காணொலிகாட்சி வாயிலான கலந்துரையாடலில், தமிழ்நாட்டிலிருந்து மாண்புமிகு தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப. அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்டங்களில் இருந்து மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் 18 இலட்த்திற்கு மேலான சுய உதவிக் குழு உறுப்பினர்கள் காணொலி மூலம் கலந்து கொண்டனர். மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்கள் திருமதி.ஜெயந்தி அவர்களின் செயல்பாட்டினை பாராட்டி வாழ்த்தினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9